ஆர்ட் போஸ்ட்

# மண்ணின் மைந்தர்...



டி.ஆர்.பி. மூக்கையாவுக்குப் பிடித்தமான கலை சாதனம் களிமண்.

பீங்கான், உலோகம் ஆகியவற்றில் ஏராளமான சிற்பங்கள் செய்கிறவர்தான் என்றபோதிலும், ஆதி கலை சாதனமான களிமண்ணையே இவர் அதிகம் தேர்வு செய்கிறார். உணர்ச்சி வெளிப்பாட்டின் உச்சநிலையில் சிற்பி இருக்கிறபோது உடனடியாகத் தன் படைப்புகளை உருவாக்க உதவும் களிமண் எளிமையான – ஆனால், வலிமையான கலை சாதனம். மூக்கையாவின் அனுபவம்மிக்க விரல்களில் – தொடுதலில் மூர்க்கமாய்ப் பாயும் காளை; அடக்கும் வீரம் செறிந்த மனிதர்கள், பறையறைபவர்கள், தாரை – தப்பட்டை ஊதுபவர்கள், காவடி, கரகாட்டக்காரர்கள் மண்ணின் மைந்தர்கள் களிமண்ணிலிருந்து எழுகிறார்கள்.

சுமார் 25 ஆண்டுகளாகக் கலைக்கல்லூரியின் நான்கு சுவர்களுக்குள் சிற்பம் பற்றிய கல்வி போதிப்பவர்தான் இவர். ஆனாலும் இவரது படைப்புகளில் – இந்த வகுப்பறைகளில் கற்றுக்கொள்ள முடியாத ஒரு மூலசக்தி இருக்கிறது. நுண்கலைக்கான டிப்ளமோ (1956) ஒன்றும், சிற்பம் பற்றிய டிப்ளமோ (1959) ஒன்றும் பயின்றவர்தான் இவர். ஆனால், வாழ்க்கையிலிருந்து நேரடியாகப் பயின்று கொண்டதுதான் ஏராளம் என்று குறிப்பிடுகிறார்.

மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரின் ஓரமாக இருக்கும் ராமசாமிபுரம் என்னும் கிராமத்தில் பிறந்த இவரது படைப்புகள், இந்த மலைமக்களின்


உடம்புகளை, அது பேசும் வார்த்தைகளைப் புரிந்துகொண்டவை.

ஒரு மனிதனின் முகம் என்று எடுத்துக்கொண்டால், அதை வளைந்த ஒரு தட்டு போல அமைக்கிறார். மூக்கு என்று பெயருக்குச் சிறிய உயர்ந்த பகுதி. கண்கள் பெரும்பாலும் கிடையாது. வாய் என்று எதுவும் கிடையாது. சீறிப் பாயும் காளைகளின் வயிற்றுப் பகுதி பெரும்பாலும் உட்குடையப்பட்டிருக்கும். இப்படி உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் கண், வாய் போன்ற முக்கிய உறுப்புக்களைக்கூடக் காட்டாமல் இவரது படைப்புகளில் எப்படி உணர்ச்சித் தீவிரம் உச்சமாக வெளிப்படுகிறது?

மூக்கையா வடிவங்களை எவ்வளவு தூரம் எளிமைப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு எளிமைப்படுத்தி விடுகிறார். இது நவீன கலையின் உத்தி முறையாகும். அடுத்ததாக, முக அபிநயங்களின் மூலமாகப் பேசுவதைக் காட்டிலும் உடம்பின் வடிவ அமைப்புரீதியாகப் பேசும் ஒரு மொழியை அவர் கையாள்கிறார். தன் படைப்புகளுக்கு முன்மாதிரியாக வாழ்க்கையின் நேரடியான அனுபவங்களைப் பயன்படுத்துகிறார். இந்த மூன்றுமே அவரது சிற்பக் கலையின் சாரமாகின்றன.

இவரது கலையை 'நாட்டுப்புறக் கலை' (Folk Art) என்றும், 'ஆதி மனிதர்களின் கலை' (Primitive Art) என்றும் தவறாக

மூக்கையா



'நாட்டுப்புறக் கலை',
'மலைமக்களின் கலை' என்பவை
எல்லாம் ஒரு சமூகத்தின்
கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டு
இயங்குவது. தனிமனித சுதந்திரம்
இங்கு மிகக் குறைவு.
உதாரணமாக, ஒரு மதுரை
வீரனின் சிலையையோ
ஐயனாரின் சிலையையோ
செய்யும்போது, அதில் அந்தச்
சிலையின் விழிகளில்
கண்மணியைத் தீட்டாமல் 'கண்
திறக்காமல்' விட்டுவிடுவதுண்டு.
காரணம் – அந்தச் சாமி

[illegible] சாமி என்பதும்,
கண்களைத் திறந்தால் அவர்
கோபத்தைக் கொட்டிவிடுவார்
என்ற நம்பிக்கைதான். ஆனால்,
மூக்கையா தன் சிற்பங்களில் கண்
என்ற பகுதியையே காட்டாமல்
விடுகிறார் என்றால், அதற்குக்
காரணம் வடிவ எளிமை என்ற
உத்திதான்.

மூக்கையாவின் 'பறையறையும்
மனிதன்' சிற்பத்தை எடுத்துக்
கொள்வோம். பறையைத் தன்
மார்போடு அணைத்தபடி இரண்டு
கரங்களால் அதை அறைந்து
கொண்டே நடனமாடும்
பாவனையில் இருக்கிறது இந்தச்
சிற்பம். சிற்பத்தின் தலை
உடம்புக்குப் பொருந்தாததாக
சிறிய அளவில் இருக்கிறது.
கால்கள் அகன்று, ஊன்றி
இருக்கின்றன. பறையிலிருந்து
எழுகிற தாள லயம் சிற்பத்தின்
உடல் அமைப்பின் மூலமாகவே
நமது காதுகளை எட்டுகிறது.



இதேபோன்றுதான் இவரது
'ஜல்லிக்கட்டு' சிற்பமும்கூட!
"பாயும் காளையின் வயிற்றுப்
பகுதியை ஏன் குடைந்து எடுத்துப்
பள்ளமாக்கிவிட்டீர்கள்?" என்று
கேட்டால், "பாய்ந்து போரிடும்
காளைக்கு பெரிய வயிறு
தேவையில்லை. காளையின்
வேகத்தைக் காட்ட அது
தடையாக இருக்கும். எனவே,
அதைக் குடைந்து எடுத்து
விடுவதன் மூலமாக வேகத்தை
அதிகப்படுத்த முடிகிறது..." என்று
குறிப்பிடுகிறார் மூக்கையா.

ஓவிய மேதை பிகாஸோ ஒருமுறை
சதைத் திரட்சிமிக்க ஒரு எருதுவை
முதலில் வரைந்தார். பிறகு அதே
சித்திரத்தின் சதைகளை
ஒவ்வொன்றாகக்
குறைத்துக்கொண்டே வந்தார்.
இறுதியில் சில கோடுகளை
மட்டுமே கொண்ட எருது
உருவாயிற்று. இதன் தலை,
கொசுவின் அளவில் இருந்தது.
இப்படித்தான் கலை ரீதியான
காரணங்களுக்காக மூக்கையாவின்
சிற்பங்களில் உருத்திரிபு
ஏற்படுகிறது. இதை 'நாட்டுப்புறக்
கலை' என்று சொல்வது, நவீன
கலையைச் சரிவரப் புரிந்து
கொள்வதற்குத் தடையாக
இருக்கும். மூக்கையாவின்
சிற்பங்களில் மரபும் உண்டு.
நவீனமும் உண்டு. நவீன கலை
என்பது மேல்நாட்டுக் கலையின்
வெற்று எதிரொலி அல்ல. மாறாக
நமது மண்ணின்
அடையாளத்துடனும் கூடிய
தற்காலத்தன்மை கொண்ட ஒரு
கலை என்பதைச் சிற்பி மூக்கையா
நம்புகிறார். அதைச்
செயலாக்குகிறார்.

– இந்திர